# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண். 66 /2016**

திரு. A. தெய்வசிகாமணி,
3/285, கோவிந்தசாமி தெரு,
அகரமேல்,
நசரத்பேட்டை,
சென்னை – 600 123. ...... மேல் முறையீட்டாளர்

எதிர்

உதவி பொறியாளர்/இ&ப,
நசரத்பேட்டை,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3/229, கோபால் தெரு, நசரத்பேட்டை,
சென்னை– 600 123. ...... எதிர்மனுதாரர்

**ஆணை நாள் : 21–9–2016**

1. திரு. A. தெய்வசிகாமணி, அகரமேல், நசரத்பேட்டை அவர்களின் 16.8.2016 நாளிட்ட மனு மேல்முறையீட்டு மனு எண்.66/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மின்இணைப்பு எண்.281–012–17ல் மீட்டர் கட்டணமாக ரூ.548/– மற்றும் சோதனைக்கட்டணம் ரூ.75/– ஆக மொத்தம் ரூ.623/– மின்கட்டணத்துடன் வசூலிக்கப் பட்டுள்ளது. கணக்கீடு செய்பவர் அவ்வாறு மின்கட்டணத்துடன் மீட்டர் கார்டில் மேற்கண்ட கட்டணங்களை சேர்த்து வசூலிப்பது தவறு என்று தெரிவித்து அந்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் கோரியுள்ளார்.

3. மேற்கண்ட மனுவின் நகல், உதவி பொறியாளர்/இப/நசரத்பேட்டை, சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–1 அவர்களுக்கு இசைவிணக்கம் ஏதும் ஏற்படவில்லை எனில் பதிலுரை சமர்ப்பிக்க வேண்டும் என்று 31.8.2016 நாளிட்ட அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டது.

4. மீட்டர் அவருடைய மின்இணைப்பில் மாற்றப்பட்டுவிட்டதால் மேல்முறையீட்டாளர் அவர் கொடுத்த புகாரை ரத்து செய்ய கோருவதாக கடிதம் கொடுத்துள்ளார் என்று எதிர்மனுதாரர் அவருடைய 12.9.2016 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்து மேல்முறையீட்டாளரின் 3.9.2016 நாளிட்ட கடிதத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார்.

5. மேல்முறையீட்டாளரும் தன்னுடைய 15.9.2016 நாளிட்ட கடிதத்தில் தான் அவ்வாறு கடிதம் இளமின்பொறியாளர்/நசரத்பேட்டை அவர்களிடம் கொடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

6. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய 16.9.2016 நாளிட்ட கடிதத்தில் தற்பொழுது மேற்கண்ட மின்இணைப்பில் மீட்டர் மாற்றப்பட்டதின் அடிப்படையில் அவர் கொடுத்த மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார். அந்த 16.9.2016 நாளிட்ட கடிதத்தின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“நான் நசரத்பேடடை பிரிவில் உள்ள மின்இணைப்பு எண்.281–012–17 க்கு மீட்டர் மாற்றப்படவில்லை என புகார் அளித்து மேலும் பார்வையில் கண்டுள்ள கடிதத்தில் மேல் முறையீடு செய்திருந்தேன்.*

*தற்போது மேற்கண்ட மின்இணைப்பில் மீட்டர் மாற்றப்பட்டதின் அடிப்படையில் நான் கொடுத்த மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்பதை கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”*

7. மேல்முறையீட்டாளர் அவரின் மின்இணைப்பில் மீட்டர் மாற்றப்பட்டதின் அடிப்படையில் அவர் கொடுத்துள்ள மேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதால் மேல்முறையீட்டு மனு எண்.66/2016 தள்ளுபடி செய்யப்படுகிறது என்று தீர்வு செய்யப்படுகிறது.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. A. தெய்வசிகாமணி,
3/285, கோவிந்தசாமி தெரு,
அகரமேல்,
நசரத்பேட்டை,
சென்னை – 600 123.

2) உதவி பொறியாளர்/இ&ப,
நசரத்பேட்டை,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
3/229, கோபால் தெரு, நசரத்பேட்டை,
சென்னை– 600 123.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 கே.வி. துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை–600 078.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.